சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 216/2019

**PW 1 சேர்மத்துரை** **27.02.2026**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

1.மசாஆ.-13 எனது வங்கிக் கணக்குப் புத்தகம் நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது)

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சட்டத்திற்கு புறம்பாக 2 நபர்களுக்கு மேலாக பொலிரோ பிக்கப் வாகனத்தில் உட்கார்ந்து இடைஞ்சல் ஏற்படுத்த வண்ணம் சென்றோம் என்றால் சரிதான். சட்டத்திற்கு புறம்பாக 8 நபர்களுக்கு மேல் சரக்கு ஏற்றி செல்லும் வாகனத்தில் சென்றோம் என்று சொன்னால் சரிதான். எனது வாகனத்தின் ஓட்டுநர் கவனமாக ஓட்டி சென்றிருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றும் நாங்கள் அமர்ந்து சென்ற வாகனத்தின் ஓட்டுநர் தான் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டினார் என்றால் சரியல்ல, கார் ஓட்டுநரின் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம். 1ம் எதிர்மனுதாரர் காரை கவனமாக ஓட்டி வந்தார் என்றும், நாங்கள் சரக்கை ஏற்றி செல்லும் வாகனத்தில் கேபினில் ஓட்டுநருக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வண்ணம் சென்ற காரணத்தினால் தான் நாங்கள் சென்ற ஓட்டுநர் தான் கவனக்குறைவாக காரின் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. நான் சென்ற வாகனமானது விபத்து சமயத்தில் தகுதி சான்று இல்லாமல் ஓட்டி சென்று விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல. நான் உட்கார்ந்து சென்ற வாகனத்தின் ஓட்டுநர் உரிமையாளர் காப்பிட்டாளரை சேர்க்காத காரணத்தினால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில்

அட்வான்ஸ் தொகை காட்டியுள்ளேன் என்றும், ஆகவே அந்த மருத்துவ பில்களில் ரூ.7,700/- சேர்த்து காட்டப்பட்டுள்ளது என்றும் அது குறைத்து காட்டப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களில் 21, 22, 29 பில்களில் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த மருத்துவ பில்களை ஏற்றுக்கொள்ள கூடாது என்றால் சரியல்ல. எனக்கு 50 சதவீதம் ஊனம் ஏற்பட்டுள்ளதாக ஆதாரம் இல்லாமல் கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது வேலை மற்றும் வருமான வரியை காட்டுவதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விவசாய தொழில் செய்வதால் காட்டவில்லை. நான் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றுட்ம ஒவ்வொரு தலைப்புகளின் கீழ் கேரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு ஆதாரமற்று கேட்கப்பட்டுள்ளது என்றும் அதனால் இழப்பீடு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி